C

# அறிவித்தல்

கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தம்) எனும் தனியார் உறுப்பினர் சட்டமூலம் தொடர்பில் அறிவித்தலொன்றை செய்யவிரும்புகிறேன்.

இந்த சட்டமூலம் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எம்.ஏ.சுமந்திரன் அவர்களினால் 2016 பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோடு அரசியலமைப்பின் 154 எ(5)அ ஆம் உறுப்புரையின் பிரகாரம் அனைத்து மாகாண சபைகளுக்கும் ஆற்றுப்படுத்தப்பட்டதோடு குறிப்பிட்ட மாகாண சபைகளின் கருத்துக்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பிவைக்குமாறு 46அ(2)(அ) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் வேண்டப்பட்டது.

கிழக்கு, மேல், தென், சபரகமுவ, மத்திய, வட மத்திய மற்றும் ஊவா மாகாண சபைகள் இந்த சட்டமூலத்திற்கு இணக்கம்தெரிவித்துள்ளன.

வடமேல் மற்றும் வட மாகாண சபைகள் திருத்தங்களுக்கு உட்பட்டு இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற இணக்கம் தெரிவித்துள்ளன.

மாகாண சபைகளின் கருத்துக்கள், கடற்றொழில் மற்றும் நீரக வளங்கள் அபிவிருத்தி அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்படவேண்டுமென நான் பணிக்கின்றேன்.